**DEPOSITION OF WITNESS**

In the Court of District Munsif cum Judicial Magistrate, Cheyyur
CC Case No. 275/2025
Prosecution witnesses. PW2, LW3

| | |
|---|---|
| பெயர். திருமதி.மங்களபிரியா | ஜாதி. |
| கணவர் பெயர்.திரு.குசலவன் | தொழில். |
| கிராமம். | சமயம். |
| தாலுக்கா. | வயது. |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 27th day of July, 2026**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு நான் 2025ம் வருடம் மதுராந்தகம் மதுவிலக்கு அமல் பிரிவல் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 19.01.2025 ம் தேதியில் நான், தலைமை காவலர் ராஜன் 335 மற்றும் முதல் நிலை காவலர் சீனிவாசன் 354 ஆகியோர் பார்ட்டி சகிதம் மதுவிலக்கு வேட்டையாக செய்யூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில் கண்காணித்து வந்தபோது பெரும்பாக்கம் கிராமத்தில் சங்கர் என்பவர் பனங்கள் விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 13.30 மணியளவில் அவரது வீட்டின் அருகே சென்று ஒரு ஆண் நபரை பிடித்து பெயர் விலாசம் விசாரிக்க சங்கர், வயது 52, த/பெ.சுந்தரம் முதல் தெரு, பெரும்பாக்கம் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் என்று கூறினார். அவர் இருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட மண்பாணையில் சுமார் 1 லிட்டர் பனங்கள் இருந்தது. அதை நுகர்ந்து பார்த்தபோது புளித்த வாடையுடன் வாய்குமட்டலும் வந்தது. அவரிடம் இது

குறித்து விசாரணை செய்ய அவருக்கு சொந்தமான பனை மரங்களில் இருந்து பனங்கள்ளை இறக்கி விற்பனை செய்ய வைத்துள்ளதாக கூறினார். மேற்படி குற்றத்திற்காக எதிரியை 13.45 மணிக்கு கைது செய்து எதிரியிடம் இருந்து பனங்கள்ளை கைப்பற்ற பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் வந்த எங்கள் முன்னிலையில் 14.00 மணிக்கு மகஜரில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். ( கை**ப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி14.15 மணிக்கு அழித்தல் மகசர் தயார் செய்து என் முன்னிலையில் பாதுகாப்பான முறையில் பனங்கள்ளை கொட்டி அழித்து அழித்தல் மகசர் தயார் செய்தேன். **(அந்த அழித்தல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி எதிரி தக்க பிணையில் விடுவிக்கப்பட்டார்.

3. பின்பு எதிரியுடன் 16.30 மணிக்கு காவல் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.33/2025, U/s.4(1)(C) TNP Act r/w 4(1)(d) TNP Act ல் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின் இறுதியாக விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 20.01.2025 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

பனங்கள்ளை யார் முகர்ந்து பார்த்தது என்றால் சாட்சி ராஜன் மற்றும் சீனிவாசன். அப்படி முகர்ந்து பார்த்தபோது விஷ நெடியுடன் கூடிய வாயு ஏற்பட்டு மருத்துவமனையில் யாராவது அனுமதிக்கப்பட்டார்களா என்றால் இல்லை. பனங்கள்ளை ஆய்விற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக

போடப்பட்ட பொய் வழக்குக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடம் சென்றிருந்தால் வரைபடம் தயார் செய்து பொதுஜன சாட்சிகளை சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.